**தலைப்பு 126 – கல்வி அமைச்சு**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 126 - கல்வி அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(அ)** நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

**(ஆ)** முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(அ) | கொள்வனவுகளின் பெறுமதி மற்றும் பெறுமதிகள் சமமாக இருக்க வேண்டியிருந்தமை. ACA2i | 1.6.1(ஆ)(ii) |
| 1.6.1(ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பம் மற்றும் முன்னைய ஆண்டின் இறுதியில் நிதிச் சொத்துக்களின் மீதி. | 1.6.1(ஆ)(i) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குககள் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒன்றிணைந்த கணக்கு இணக்கக் கூற்றில் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 2,805,377,162 ஆக இருந்ததுடன், தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் அந்த மீதி ரூபா 2,800,692,805 ஆகும். அதன் பிரகாரம் கட்டுபாட்டு கணக்கிற்கும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கும் இடையே ரூபா 4,684,357 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளை சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஒன்றிணைந்த கணக்கு இணக்கக் கூற்றில் கட்டுபாட்டு கணக்கின் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஒன்றிணைந்த கணக்கு இணக்கக் கூற்றில் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,801,003,005 ஆக இருந்ததுடன், திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 2,861,648,147 ஆனமையால் அந்த மீதிகளுக்கு இடையே ரூபா 60,645,142 வேறுபாடு காணப்பட்டது. | நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற இந்த வேறுபாட்டை சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீதியும் ஒன்றிணைந்த கணக்கு இணக்கக் கூற்றின் தனிப்பட்ட மீதியும் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லா சொத்துக்களின் மீதி ரூபா 172,273,922,034 ஆக இருந்ததுடன. 2022 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு அந்த மீதி ரூபா 177,219,581,019 ஆனமையால் ரூபா 4,945,658,985 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்குகளை பரீட்சிக்கும் போது ரூபா 4,945,658,985.00 வேறுபாடு காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் திறைசேரியுடன் கலந்துரையாடி வேறுபாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லா சொத்துக்களில் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ii) | நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2022 ஆம் ஆண்டில் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதியாக ரூபா 3,722,761,428 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உரிய மூலதன செலவின விடயத்தின் கீழ் ரூபா 14,113,135,406 செலவினம் செலவிடப்பட்டிருந்தமையால் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் மூலதன சொத்துக்களின் கைப்பற்றல்கள் ரூபா 10,390,373,978 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடு ரூபா 10,390,373,978.00 இற்காக தாக்கமளிக்கும் நில பெறுமதிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், மேலும் இனங்காண முடியாத பெறுமதியை திறைசேரியின் அரச கணக்குகள் பிரிவுடன் கலந்துரையாடி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன சொத்துக்களை கைப்பற்றும் செலவினத்தை சரியாக நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2022 ஒக்டோபர் 25 ஆம் திகதிய மாற்றல் பத்திரத்தின் பிரகாரம் தலைப்பு இலக்கம் 421 இன் கீழ் காணப்பட்ட திறன் அபிவிருத்தி தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சுக்குரிய ரூபா 5,538,752,522 பெறுமதியான சொத்துக்கள் கல்வி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அது சொத்துக்கள் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA 6) உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த சகல சொத்துக்களும் ஆரம்ப மீதியில் சீராக்கப்பட்டுள்ளதுடன், அந்த பெறுமதிகளின் தெளிவின்மைகள் காணப்படுகின்றமையால் தீர்த்து வைப்பதற்கு திறைசேரியுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கையேற்கப்பட்ட சகல சொத்துக்களையும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | SA 80, SA 82, ACA2(i) நிதி நிலைமை மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட செலவின பொழிப்பு என்ற ஆவணங்களின் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதியில் பல்வேறு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், வேறுபாடுகள் மற்றும் புதிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமாப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லா சொத்துக்களுக்குரிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (v) | நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியில் சேர்க்கப்பட்ட பெறுமதிகளுக்கு உரியதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,082,959,009 மதிப்பீட்டு பெறுமதியொன்றுடன் மீதியொன்று நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லா சொத்துக்களின் மீதியும் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் ரூபா 3,082,959,609.00 மீதி தொடர்பாக சரியாக வெளியிட முடியாதிருந்ததுடன், மாதாந்த கணக்கு பொழிப்பை இணக்கத்தை பூர்த்தி செய்து கணக்கீடுகளை சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் மீதி அதற்குரிய பதிவேடுகளின் மீதியுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (vi) | கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் சலுசல கிளையில் பாடப் புத்தகங்கள் வெள்ளத்திற்கு உட்பட்டமை தொடர்பாக ரூபா 4,259,427 ஆன இழப்பு 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பதிவழிக்கப்படாமல் முன்கொண்டுவரப்படுகின்ற மீதியாக உள்ளடக்கப்படாதிருந்த போதும், 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டு கணக்குகளில் அந்த நட்டம் தவறொன்றினால் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல இழப்புக்கள் மற்றும் சேதங்களை நட்டப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) கணக்காய்வு சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒன்றிணைந்த கணக்குகளை ஒப்பீடு செய்த போது தனிப்பட்ட மீதி வகைப்படுத்தலின் கூட்டு மொத்தம் கட்டுபாட்டு கணக்கின் ஆண்டின் இறுதியில் மீதியுடன் ஒப்பீடு செய்த கூற்றில், மாகாண சபைகள் கடன் மீதி தீர்த்து வைத்தலாக கிழக்கு மாகாணத்திற்குரியதாக சேர்க்கப்பட்ட ரூபா 22,424,325 தொகை மற்றும் குறைக்கப்பட்ட ரூபா 48,909,855 தொகை உருவாக்கப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ரூபா 22,424,322 இற்குரிய தகவல்கள் கண்டறியப்படுவதுடன், அந்த தகவல்களை உறுதிப்படுத்தி உடனடியாக உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாகாண சபை கடன் மீதியை தீர்த்து வைத்தலாக காண்பிக்கப்பட்ட ரூபா 48,909,855 இற்குரிய மீதியை உறுப்படுத்தியதன் பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | ஒன்றிணைந்த கணக்கு இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும், கட்டுப்பாட்டு கணக்கின் இறுதி மீதிக்கும் இடையேயான வோறுபாடுகளை சீராக்குவதற்கான இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட இனங்காணப்படாத மீதியாக குறிப்பிடப்பட்ட தேறிய பெறுமதியான ரூபா 3,691,790 ஆன கடன் மீதிகளுக்குரிய மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த வேறுபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்யுமாறு உரிய கணக்கீட்டு பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வேறுாபடுகளை இனங்காண்பதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | அமைச்சுக்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 31 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் பதிவளிக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்களுக்காக விரைவாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தாமதம் இன்றி பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீண்டெழும் செலவின விடயத்திற்கும், மூலதன செலவின விடயத்தின் கீழும் வழங்கப்பட்ட ரூபா 3,200,000,000 ஆன குறைநிரப்பு மதிப்பீட்டின் தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததது. | நாணய கடிதம் ஓய்வுபெறச் செய்தல் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டமையால் மற்றும் ஆண்டின் இறுதியில் கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் சேமிக்கப்பட்டிருந்தது. | குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் நிதியினை பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உரிய முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும். |
| (ii) | வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் கீழ் நிதிஏற்பாடு செய்யப்படாத மீண்டெழும் செலவின விடயம் மற்றும் மூலதன செலவின விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் முறையே 90 சதவீதம் மற்றும் 93 சதவீதம் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | உரிய குறைநிரப்பு மதிப்பீட்டை பின்பற்றி ஆண்டின் இறுதியில் ஏற்பட்டமையால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அமுல்படுத்துவதற்கு போதியளவான காலம் காணப்படாதிருந்தமையின் அடிப்படையில் சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. | குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் நிதியினை பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உரிய முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய இலக்கம் 255/2017 என்ற அரச கணக்குககள் சுற்றறிக்கையின் 2(ஈ) பந்திக்கு முரணாக 2022 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் சுற்றில் ரூபா 3,124,434,401 வீதமான கடப்பாடுகள் ரூபா 236,431,182 ஆன பொறுப்புக்களும் உட்படுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,198,614,351 கடப்பாடுகள், ரூபா 2,127,121,167 பொறுப்புக்களும் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன். மூலதன கடப்பாடாக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 126-02-7-35-2509(12)செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 2,410,132,070 பொறுப்புக்களின் பெறுமதி தவறுதலாக மூலதன கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் உரிய கடப்பாட்டு பெறுமதி திருத்தப்பட வேண்டியிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட செலவின விடயங்களுக்கு உரியதாக காணப்பட்ட ரூபா 5,439,907,245 பொறுப்புக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கோ அல்லது வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் கிடைப்பதில் தாமதத்தின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க முடியாதிருந்தது. | சகல பொறுப்புக்களும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த காலர எல்லையில் சகர கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கும் வகையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 1.6.1.(இ)(iii) பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விரைவாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 104(3)(4) ஆம் பிரிவுகள். | வாகன விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட கால தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுமாயின் ஆரம்ப அறிக்கையொன்று உடனபடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், நட்ட ஏற்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2021, 2022 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபா 4,418,108 ஆன 18 விபத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | அரசாங்கத்திற்கு சொந்தமான சகல வாகனங்களும் பயன்படுத்தப்படுகின்ற நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும், ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களில் 08 வாகனங்கள் பயன்படுத்தப்பட்ட போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2015 யூலை 10 ஆம் திகதிய இலக்கம் 02/2015 என்ற அரச நிதி சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டு முதல் 2021 வரையான காலத்தில் அகற்றப்பட்ட வாகனங்கள் 2022 ஆம் ஆண்டு வரையிலும் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 1980 செப்தெம்பர் 09 ஆம் திகதிய மு/7/63 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | 40 பாடசாலைகளை தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்திய போதும் 06 பாடசாலைகளின் மாணவர் விடுதிகளுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் போது பெறப்பட்ட வைப்பு பணம் மாணவர் விடுதிகள் தவிர்ந்த வேறு | அதிபர்களுக்கு மீண்டும் புதிய சுற்றறிக்கை மூலம் அறிவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களின் போது செலுத்துதல் அல்லது இறுதி ஆண்டில் விடுதி கட்டணத்திற்காக ஈடுசெய்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ள்ளது. | |
| (v) | 2012 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 2012/34 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி | கொழும்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற தேசிய பாடசாலை ஒன்றில் நீச்சல் தடாகம் பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவர் தரப்பொன்று பணிப்பாளர் சபையாக சேவையாற்றுகின்ற, கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் கம்பனியால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றமையும் நீச்சல் தடாகத்தின் மூலம் வருடாந்தம் கணிசமான வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டமையும், நீச்சல் தடாகம் அமைந்துள்ள வளவில் பழைய மாணவர் சங்கத்தின் செலவில் 12,000 சதுர அளவினை உடைய மூன்று மாடி கட்டிடம் ஒன்று நிர்மாணித்து அந்த மூன்று மாடி கட்டிடம் வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டு அதிலிருந்து கணிசமான வருமானத்தை பெற்றுக் கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றற்கை ஏற்படுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 2022 ஒக்டோபர் 04 ஆம் திகதிய எம்ஆர்டி/ஈகீவ்டி/ 2002/26 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 02(v) ஆம் பந்தி | வெளிநாட்டு விடுமுறை பெற்ற எந்த ஒருவரும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் மீண்டும் நாட்டிற்கு வருகை தராதிருப்பராயின் உரிய மாணவர்களுக்காக தொடர்ச்சியாக வெற்றிடம் வைக்க முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும், காலி மஹிந்த வித்தியாலயத்தில் 2, 3 மற்றும் 4 ஆம் தரங்களில் பயிலுகின்ற 16 மாணவர்களுக்கு வெளிநாடு சென்று ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அந்த மாணவர்களுக்காக தொடர்ச்சியாக வெற்றிடம் வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (vii) | 2008 செப்தெம்பர் 19 ஆம் திகதிய 2008/37 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தி (அ), (ஆ) | 2 ஆம் தரம் முதல் 5 ஆம் தரம் வரையான வகுப்புக்களில் மாணவர்களின் எண்ணிக்கை, முதலாவது தரத்தில் உள்ளடக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அந்த வகுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை வரையறுக்க வேண்டியிருந்த போதிலும், கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலை ஒன்றில் 15 வகுப்புக்களில் மாணவர் எண்ணிக்கை 1 முதல் 7 வரை குறித்துரைத்த எல்லையினை விஞ்சி காணப்பட்டது. 6 தரம் முதல் 11 ஆம் தரம் வரையான 15 வகுப்புக்களில் மாணவர்கள் 1 முதல் 7 வரை எல்லையை விஞ்சியிருந்தனர். | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | 2015 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய 1928/28 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி | இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாண குறிப்பின் பிரகாரம் நிரற்படுத்தப்பட்ட தேசிய பாடசாலைகள் 64 இற்காக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 தரத்தின் உத்தியோகத்தர்கள் அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 30 பாடசாலைகளுக்கு உரியதாக அதன் பிரகாரம் நியமனங்கள் வழங்கப்படவில்லை. | கல்வி நிர்வாக சேவையின் 1 வகுப்பின் அதிபர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற 34 பதவிகளுக்காக 2023.06.06 மற்றும் 2023.06.07 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடாத்தி அதிபர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிரற்படுத்தப்பட்ட தேசிய பாடசாலைகளுக்காக வர்த்தமானியின் பிரகாரம் அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் நில்வலா கல்விக் கல்லூரியினால் வெளி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்பட்ட ரூபா 589,900 தொகை கல்வி கல்லூரியின் உத்தியோகபூர்வ வங்கி கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடுகின்ற கட்டணம்/ வருமானம் கல்வி கல்லூரியின் உத்தியோகபூர்வ வங்கி கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதி பிரமானம் 371(2) இன் பிரகாரம் உப கட்டுநிதி ஆகக் கூடிய எல்லையை விஞ்சி 14 சந்தர்ப்பங்களின் போது கூட்டு மொத்தமாக ரூபா 3,749,230 செலுத்தப்பட்டிருந்ததுடன், கட்டுநிதி விநியோகித்தல் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்க வேண்டியிருந்த போதிலும், ரூபா 2,541,986 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 39 சந்தர்ப்பங்களின் போது பதவிநிலை அல்லாத 07 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயல்நிமித்த உப கட்டுநிதிக்குரிய பணிகள் நிறைவு பெற்றவுடன் தீர்த்துவைக்க வேண்டிய போதிலும், ரூபா 2,252,347 ஆன 38 கட்டுநிதிகள் மீளத் தீர்ப்பதற்கு 14 நாட்கள் முதல் 134 நாட்களுக்கு இடையிலான கால வீச்சிலான தாமதம் ஏற்பட்டிருந்தது. | பிரிவெனா பிரிவில் குறைந்த பதவி அணி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவி நிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். செயல் நிமித்த உப கட்டுநிதி சிலவற்றை தீர்ப்பதற்காக நீண்ட காலம் எடுத்திருந்ததுடன், எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாதிருப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட திகதியில் இருந்து 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 05 வைப்புக் கணக்குகளில் கூட்டு மொத்தமாக ரூபா 373,724,038 தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது காணப்பட்டதுடன், அதில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 32,581,899 மீதியும் உள்ளடங்கியிருந்தது. | இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டள்ளதுடன், தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ள அளவு மாதம் ஒன்றுக்குள் கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | உள்நாட்டு பட்டப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்காக வெளிநாட்டு புலமைப் பரிசிலை பெற்றுக் கொள்வதற்காக 2021 யூன் 25 ஆம் திகதி சீனாவின் தூதுவர் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட ரூபா 1,810,000 தொகை உரிய நலனாளிகளுக்கு வழங்கப்படாமல் அறிக்கை திகதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தினால் பெயர்கள் கோரப்பட்டுள்ளதுடன், பெயர் முன்மொழிவுகள் கிடைத்த பின்னர் இந்த புலமைப் பரிசிலை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உரிய நலனாளிகளுக்கு உடனடியாக புலமைப் பரிசிலை வழங்குதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்வி அமைச்சின் பணிப்பொறுப்பின் பிரகாரம் உலக போட்டி நிலைமைக்கு ஈடுகொடுக்கும் வகையில் நம்பிக்கையாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுத்தல் தொடர்பான நம்பிக்கையுடன் உள்நுழைவதற்குரிய இயலுமை காணப்படுகின்ற வகையில் தேசிய கல்வி திட்டத்தை வடிவமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவேற்றுவதற்கு 2022 ஆம் ஆண்டின் போதும் முடியாதிருந்தது. | பாட விடயங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த போதும் 2023.03.13 ஆம் திகதி சனாதிபதி செயலாளரினால் இலக்கம் PS/SAD/Education/2023 என்ற கடிதத்தின் பிரகாரம் கல்வி மறுசீரமைப்புக்களை அமுல்படுத்துதல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. | மாணவர்கள் பரம்பரையின் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு தற்போதைய உலகிற்கு ஈடுகொடுக்கின்ற தேசிய கல்விக் கொள்கையொன்றை தயாரித்தல் வேண்டும். |

**3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | விஷேட கல்வி தேவையுடைய மற்றும் விஷேட தேவையுடனான மாணவர்களுக்காக கல்வி வசதிகளை உள்ளடக்கிய மாணவர்களுக்காக உள்ளக ரீதியில் கல்வியை வழங்குதல் தொடர்பாக இலக்கம் 37/2020 என்ற சுற்றறிக்கை மற்றும் ஆலோசனைக் கோவை 2020 திசெம்பர் 03 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், ஆலோசனை கோவையில் உள்ளடக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | விஷேட கல்வி தேவையுடைய பிள்ளைகளுக்கு உள்ளக ரீதியில் கல்வியினை வழங்குதல் 2023 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு ஆசிரியர் வழிகாட்டிகளுக்கு உரிய மாகாணங்களின் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. நாள் தோறும் வீட்டிலிருந்து வெளியே செல்வதற்கு வசதியீனமான ஊனமுற்ற மாணவர்களுக்காக கல்வி கற்பதற்கு உள்ளீர்க்கும் கல்வி ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டிருந்தது. கல்வியினை வழங்குவதற்குத் தேவையான பரீட்சைத் திட்டத்தை உள்ளடக்கி சர்வதேசரீதியில் | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆலோசனைக் கோவையில் உள்ளடக்கப்பட்ட பணகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ii) | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் திட்டமிடப்பட்ட பணிகளுக்கு இடையே எந்தவொரு செயல் முன்னேற்றமும் அடையப்படாத 12 பிரிவுகளுக்குரிய 30 பணிகள் அளவில் காணப்பட்டதுடன், அவற்றின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 793,372,000 ஆகும். | நிதி அமைச்சின் 2022.04.26 ஆம் திகதிய 03/2022 சுற்றறிக்கை, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் போது கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முடியாதிருந்தமை, அத்தியவசியமான பிரகாரம் கட்டுநிதி கிடைக்கப் பெறாதிருந்தமை, COVID - 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமைகள் போன்ற காரணங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தன. | நடைமுறை ரீதியில் அமுல்படுத்தக்கூடியதாக திட்டங்களை தயாரித்து தயாரிக்கப்பட்ட திட்டத்தை அமுல்படுத்தி உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2021 ஆம் ஆண்டின் போது பிரிவெனா கல்வி பிரிவினால் கேட்போர் கூடமொன்றை தயாரித்து அதன் மூலம் பிரிவேனா பாட பரிந்துரைகளை மேவுகை செய்யும் வகையில் கானொலி பாட நெறியை தயாரித்தல், யுடியுப் ஊடாக தேவையான கானொலிகளை வடிவமைத்தல், நாட்டில் பல்வேறு திறமையான பிரிவேனா மாணவர்களுக்கு தர்ம உபதேசங்கள் மற்றும் ஏனைய குறித்துரைத்த நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் விளம்பரப்படுத்தும் பணிகளை நிறைவேற்றுவதற்காக கிரயம் ரூபா 1,315,070 ஆன உபகரணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும், கேட்போர் கூடம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கேட்போர் கூடத்தை தயாரிப்பதற்கு பொருத்தமான இடமொன்றை பெற்றுக் கொள்வதற்காக முயற்சி எடுக்கப்பட்ட போதும் இடமொன்றை கண்டறிவதற்கு முடியாதிருந்ததுடன். தற்போது கேட்போர் கூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட சகல உபகரணங்களும் கல்வி அமைச்சுக்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கேட்போர் கூடத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்வதற்கு முன்னர் உபரகணங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்த உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | கல்வி அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கங்களுக்கு இடையே உயர் கல்வி தொடர்பான சந்தர்ப்பங்கள் மற்றும் நுழைவுகளை அதிகரித்தல் மற்றும் உலகலாவிய தொடர்பு மற்றும் பரிமாற்றம் தொடர்பான மேம்படுத்துதல் பிரதான நோக்கமாகும். இதன் கீழ் இலங்கையின் மாணவர்களுக்காக ஆரம்ப பட்டம் மற்றும் பட்டபின் | வருடாந்தம் வழிகாட்டி ஒன்று தயாரித்தல் தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்காக பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் உரிய புலமைப்பரிசில் நலனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற பட்டம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை | புலமைப் பரிசில் கையளிக்கும் பணிகளை முறைமைப்படுத்துவதற்கான வழிகாட்டி விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், பின்தொடர் |

| | | | |
|---|---|---|---|
| | படிப்பு புலமைப்பரிசில்கள் வழங்கும் பணிகளை முறைமைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சினால் வழிகாட்டியொன்று விநியோகிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் உரிய பல்கலைககழகங்களுக்கு அனுப்பப்பட்ட பின்னர் அந்த பல்கலைக்கழத்தினால் தெரிவு செய்யப்படாத மாணவர்களின் காரணமாக ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்காக மீண்டும் மாணவர்களை அனுப்பும் திட்ட முறைமையொன்று புலமைப் பரிசில் பெறுநனர்களாக பல்கலைக்கழகத்தினால் புதிதாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் உரிய மாணவர்களுக்கு கையளிக்கப்படுகின்ற பட்டம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை செய்யும் முறைமை ஒன்றும் காணப்படவில்லை. | முறைமையை இந்த ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (v) | விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்காக கஹதுடுவ வெனிவெல்கொல பிரதேசத்தில் ரூபா 247,252,882 செலவினம் ஒன்றை செய்து விஷேட கல்வி நிலையமொன்று நிர்மாணத்தல் மற்றும் வடிவமைத்தல் (Design & Built) திட்டத்தை நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் தேவையுடைய மாணவர்களை பொருத்தமானதாக தயாரிக்கப்படாதிருந்தமை பின்னர் இனங்காணப்பட்ட போதும், ஒப்பந்தம் கையளிப்பதற்கு முன் தமது தேவை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறைசாரா மற்றும் விஷேட கல்வி பிரிவினால் இந்த விஷேட கல்வி பிரிவை ஸ்தாபிக்க வேண்டிய தேவை தொடர்பான பட்டியலொன்றை பெற்று அதன் பிரகாரம் வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டையும் கவனத்தில் கொண்டு கட்டிடம் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | தேவைகளுக்கு இணங்கும் வகையில் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக் கல்வி இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 5,219,297,390 செலவிட்டிருந்த போதிலும், திட்டமிட்டபட்ட பிரகாரம் தேசிய கல்வி மறுசீரமைப்பை | 2023.03.13 ஆம் திகதி சனாதிபதி செயலாளரால் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக விநியோகிக்கப்பட்ட PS/SAD/Education/2023 ஆம் இலக்க கடிதம் மூலம் உத்தேசிக்கப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்துதல் தற்காலிகமாக கைவிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதிமேதகு சனாதிபதியின் | கல்வி மறுசீரமைப்பு அமுல்படுத்துவதற்குள்ள முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு அதற்கு முன்னுரிமை வழங்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்வதற்கு தவறியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டிருந்ததுடன், விடயப் பொறுப்பிற்குரிய பாடப் பரப்பிற்குரிய பணிகள் மற்றும் இலக்குக்கள் அத்திகதி முதல் கல்வி அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. கல்வி மறுசீரமைப்பிற்காக கடந்த 03 ஆண்டுகளின் போது இராஜாங்க அமைச்சினால் செலவிடப்பட்ட பணம் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தினால் செலவிடப்பட்ட ரூபா 350,552,393 செலவினம் பயனற்ற செலவினமாக காணப்படுகின்றதை அவதானிக்கப்பட்டது. | தலைமையில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை குழுவின் மூலம் வழங்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் கல்வி மறுசீரமைப்பு அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (vii) | இந்த நாட்டில் 353 ஆன தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரம் (1000) வரை அதிகரிக்கும் நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்வி மறுசீரமைப்பு திறந்த பல்கலைக்கழம் மற்றும் தொலைக்கல்வி இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் போது 622 பாடசாலைகளுக்கு இணைய தள வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 576 மில்லியனும், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன் பள்ளி பாடசாலைகள் மற்றும் ஆரம்ப கல்வி பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவை இராஜாங்க அமைச்சின் மூலம் 831 பாடசாலைகளுக்காக பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 44.7 மில்லியனும், உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 20.5 மில்லியனும் ஆக ரூபா 2,285.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 22 பாடசாலைகள் மாத்திரம் தேசிய பாடசாலைகளாக ஆக்கப்பட்டிருந்தது. | எந்தவொரு தேசிய பாடசாலையும் காணப்படாத பிரதேச கோட்டங்களில் 125 பாடசாலைகளை மாத்திரம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கௌரவ கல்வி அமைச்சரின் தீர்மானத்தின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்களை அமுல்படுத்தி அரசாங்க நிதியை ஆக்கபூர்வமானதாக செலவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட முன்பள்ளி பாடசாலை கல்வி கொள்கை தொடர்பாக திட்டமிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சுக்கு முடியாதிருந்தது. | முன்பள்ளி பாடசாலை கொள்கைகளுக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று வரைவு செய்யப்பட்டுள்ளது. கல்வி செயலாளரின் 2023.02.06 ஆம் திகதிய அங்கீகாரத்தில் இந்த தேசிய கொள்கை மற்றும் அதற்குரிய மிகுதி எதிர்கால திட்டங்களை அமுல்படுத்தும் எதிர்கால பணிகள் கல்வி அமைச்சின் ஆரம்ப கல்வி பிரிவிற்கு கைளிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் முன்பள்ளி பாடசாலை கல்வி கொள்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ix) | இலங்கையின் ஒட்டுமொத்த ஆசிரியர் பதவியணிக்கும் பட்டதாரி நியமனம் வழங்குதல், தேசிய கல்விக் கல்லூரிகளை பல்கலைக்கழக தரத்திற்கு உயர்த்தும் நோக்காக அமைச்சரவை குறிப்பொன்று கல்வி அமைச்சரால் 2019 திசெம்பர் 02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான கொள்கை ரீதியான அங்கீகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட போதும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கலந்துரையாடல் மட்டத்தில் மாத்திரம் காணப்பட்டது. | கல்வி அமைச்சின் கல்வி கல்லூரி பிரிவிற்குரிய ஏனைய நிறுவனங்களை தொடர்புபடுத்தி கல்விக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழ மட்டத்தில் தரமுயர்த்தும் செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், கல்விக் கல்லூரி பாட நெறிகளை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஆரம்பிக்கும் இயலுமை காணப்படுகின்றது. | ஆசிரியர் பதவி அணியினரில் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (x) | 2019 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 07 இனை உடைய தற்போதைய திட்டம் மட்டம் 10 வரை அதிகரித்தல் மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்பட்டிருந்த பட்டபின் படிப்பு மட்டம் வரை தொழிற்கல்வியை பின்பற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற பணிகள் 2023 யூலை 31 ஆம் திகதி வரையும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 இன் பாதீட்டு முன்மொழிவின் அடிப்படையில் மருத்துவ பட்டபடிப்பை பயிலுபவர்களின் எண்ணிக்கையை 300 இனால் அதிகரித்தலை உள்ளடக்கிய சில இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கத்தின் அடிப்படையில் 2019 யூன் 24 ஆம் திகதி மத்திய பொறியியல் சேவை தனியார் கம்பனிக்கு கராப்பிட்டிய வைத்தியசாலையின் பேராசிரியர் பிரிவை ஸ்தாபிக்கும் செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது.<br>உடன்படிக்கையின் பிரகாரம் 2022 யூன் 16 ஆம் திகதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்திற்காக பல சந்தர்ப்பங்களின் போது திகதி நீடிப்பும் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையிலும் 06 மாடிகள் வரை உள்ளக கட்டமைப்பை தயாரிக்கும் நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்திற்காக போதியளவான கட்டு நிதி கிடைக்காமையின் காரணமாக ஒப்பந்காரருக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டமை நிர்மாண பொருட்களின் விலைகள் தளம்பலடைந்தமை மற்றும் சந்தையில் நிர்மாண பொருட்களின் விலையில் காணப்படுகின்ற பற்றாக்குறை போன்ற விடயங்களின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் மந்தகதியில் காணப்பட்டது. தற்போது நிர்மாண நடவடிக்கைகளில் 55 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. | குறித்துரைத்த காலப் பகுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ருஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக 12 மாடிகளை உடைய கட்டிடமொன்றை நிர்மாணத்தல் | | |
| | கராப்பிட்டிய மருத்துவ பீடத்தின் பெண் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் ஆராய்ச்சி இயலளவை (Research Capabilities) அதிகரிக்கும் நோக்கத்துடன் ஆய்வு கூடம், பரீட்சை மற்றும் விரிவுரை மண்டப வசதிகளை அதிகரிப்பதற்காக ரூபா 1,092 மில்லியன் ஒப்பந்த பெறுமதியுடன் 2020 யூன் 01 ஆம் திகதி மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.<br>உடன்படிக்கையின் படி 2021 செப்டம்பர் 06 ஆம் திகதி வேலைகள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2023 சனவரி 15 ஆம் திகதி வரை திகதி நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதும், 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் 08 மாடிகள் வரை Slab அமைத்தல் | தற்போது பௌதீக செயல் முன்னேற்றம் 49 சதவீதம் ஆகும். இந்த ஒப்பந்தம் CECB நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பின்னர் 2020 திசெம்பர் முதல் 2022 யூன் வரை ஏற்பட்டிருந்த கொவிட் தொற்று நோய் மற்றும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மந்த நிலையில் காணப்பட்டதுடன், அதற்கு மேலதிகமாக ஒப்பந்தகாரருக்கு குறிப்பிட்ட நேரத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு போதியளவான பிரகாரம் நிதி கிடைக்கப் பெறாமையும் இதற்கான | கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியுமான சகல முயற்சிகளும் எடுக்க வேண்டியிருந்ததுடன், திகதி நீடிப்பை குறைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு 03 ஆவது மாடிவரை மாத்திரம் உள்ளக கட்டமைப்புக்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காரணமாகும். | |
| (iii) | ருஹுணு பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார விஞ்ஞான பீடம் ஒன்றை ஸ்தாபிக்கும் செயற்திட்டம். | | |
| | சுகாதார துறையில் மருத்துவ ஆய்வு கூடம் பயிற்சி பயிலுனர்களில் காணப்படுகின்ற கணிசமான பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்டிருந்த பிரச்சினையான நிலைமைகளை மாற்றியமைக்கும் நோக்குடன் இந்த செயற்திட்டத்திற்காக 03 கட்டிடங்களை நிர்மாணக்கும் ஒப்பந்தம் 2020 திசெம்பர் 03 ஆம் திகதி தனியார் கம்பனிக்கு ரூபா 1,501 மில்லியன் தொகையில் கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2023 யூன் 02 ஆம் திகதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மீண்டும் 2023 யூலை 14 ஆம் திகதி வரை திகதி நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் செயலாற்றல் 60 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | இந்த கட்டிடம் A, B, C ஆக 03 பகுதிகளை உடையதாக இருந்ததுடன், அதன் பிரகாரம் Block - A, B மற்றும் C என்பவற்றின் செயல் முன்னேற்றம் முறையே 58.1, 66 மற்றும் 67 சதவீதமாக அடையப்பட்டிருந்தது. | கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளல் வேண்டும். |
| (iv) | கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விடுதியொன்றை நிர்மாணித்தல் | | |
| | 400 மாணவர்களுக்காக ரூபா 300 மில்லியன் ஒட்டுமொத்த கிரயத்தின் கீழ் மாணவர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் ஆலோசனை சேவை கட்டணம் செலுத்துவதற்காக ரூபா 6,028,015 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 100 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த நிர்மாண நடவடிக்கைகளில் ஆரம்ப செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதில் பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான சகல முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) இரண்டாம் நிலைக் கல்விக்கான தகவல் தொழில்நுட்ப நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல் | | |
| கல்வி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை சாதாரண கல்வி முறைமையில் தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொடர்பாடல் நுட்பங்களை அமுல்படுத்துவதற்கான விரிவான முன்மொழிவின் விளைவாக இந்த தகவல் தொழில்நுட்ப நிலையம் (ICT Hub) நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொரியாவின் Exim வங்கி நிதி பங்களிப்பில் இந்த நிலையத்தை நிருமாணிப்பதற்காக 2019 நவம்பர் மாதம் 05 ஆம் திகதி அ.டொலர் 35,663,773 கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் தேசிய மட்டத்தில் ஒரு தகவல் தொழில்நுட்ப நிலையமும், மாகாண மட்டத்தில் 02 நிலையங்களையும் நிருமாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. உரிய நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணி தொழில்நுட்ப விடயங்களின் அடிப்படையில் அவ்வப்போது மாற்றப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தை தொடர்ச்சியாக செய்வதற்கு முடியாதிருந்தமையால் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கை 2022 நவம்பர் 10 ஆம் திகதி கலைக்கப்பட்டிருந்தது. | அவ்வப்போது காணி மாற்றப்பட்டமையால் செயற்திட்டத்தில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் இறுதியாக தீர்மானமெடுக்கப்பட்ட காணியைப் பயன்படுத்தி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக உரிய சாத்தியவள ஆய்வை மீண்டும் மேற்கொண்டு அந்த அறிக்கையில் உரிய காணி தொடர்பாக உள்ளடக்கி அந்த அறிக்கை கொரியாவின் EXIM வங்கிக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கடன் உடன்படிக்கையை திருத்துவதற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்வதற்கு முன்னர் திட்டங்களைத் தயாரித்தல், இடங்களைத் தெரிவு செய்தல் போன்வை பூர்த்திசெய்யப்பட ல் வேண்டும். |
| (ii) இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் தோட்டப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யும் செயற்திட்டம் | | |

| | | | |
|---|---|---|---|
| | மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 09 தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 300 மில்லியன் பெறுமதியுடைய செயற்திட்டத்திற்கு 2019 யூன் 19 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு தயாரித்து கூறுவிலை கோரி ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விலைகள் உயர்வடைந்து சென்றமையால் ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முடியாமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டு வரையில் பல சந்தர்ப்பங்களின் போது மதிப்பீடு திருத்தப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே 09 பாடசாலைகளின் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் ரூபா 300 மில்லியன் செயற்திட்டப் பெறுமதியில் மேற்கொள்வதற்கு அசதியினமாக இருந்தமையால் செயற்திட்டத்தின் பெறுமதி தற்போதைய வெளிநாட்டு அந்நியச் செலாவெனிக்கு ஈடாகின்ற வகையில் திருத்த முடியுமான என கருதுவதற்காக தற்போது இந்திய தூதுவராலயத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தைப பூர்த்தி செய்வதற்கு முடியுமான சகல முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | தொழில்நுட்ப பாடத்திற்கான தேசிய தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றை நிர்மாணித்தல். | | |
| | கல்வி அமைச்சினால் 2013 ஆம் ஆண்டின் போது உயர்தர பாடங்களுக்காக தொழில்நுட்பவியல் பாடத்தை அறிமுகப் படுத்துவதுடன் ஏற்பட்ட ஆசிரியர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தொழில்நுட்பவியல் விடயத்தைப் பின்பற்றுவதற்காக தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்று கொரிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் குளியாப்பிட்டி பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு 2017 சனவரி 18 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் அமெரிக்க டொலர் 14.95 மில்லியன் ஆன கொரிய குடியரசின் நிதி உதவி மற்றும் உள்நாட்டு நிதியங்களின் மூலம் இந்த கல்விக் கல்லூரிகளை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 05 வருடங்கள் அளவிலான காலம் தாமதமடைந்ததன் காரணமாக சர்வதேச கொரிய ஒத்துழைப்பு முகவராண்மை (KOIKA) இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் இருந்து விலகி அந்த பொறுப்பு அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்திற்காக தேவையான அ.டொலர் 08 இலட்சம் தொகையும் 2021 திசெம்பர் மாதம் பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டு | 2021 திசெம்பர் மாதம் CECB நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு செயற்திட்டத்தின் வேலைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது பௌதீக செயல் முன்னேற்றம் 35 சதவீதம் மாத்திரம் ஆகும். இந்த செயற்திட்டத்திற்காக KOICA நிறுவனத்தின் ஆரம்ப இணக்கப்பாட்டில் அ. டொலர் 08 மில்லியனாக இருந்த போதும் செயற்திட்டம் ஆரம்பித்ததில் தாமதம் அடைந்தமை மற்றும் தற்போதய பணவீக்கம் அதிகரித்ததன் அடிப்படையில் செயற்திட்டத்தின் திட்டமிடலின் பிரகாரம் மொத்தக் கிரயம் அ.டொலர் 08 மில்லியனை விஞ்சியிருந்தது. அ.டெலர் 08 மில்லியனை விஞ்சியிருந்த தொகை தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திலிருந்து | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த நிர்மாணங்களை விரைவாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென அந்த நிறுவனம் அறிவித்திருந்தமையால் இந்த ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் 2022 திசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் புதிய ஒப்பந்தக்காரரல் உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது KOIKA நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவித் தொகையை விஞ்சி ஏற்படுகின்ற செலவினத்திற்காக சான்றிதழ் ஒன்று கல்வி அமைச்சின் மூலம் கோரப்பட்டிருந்த போதிலும் அதற்காக கைச்சாத்திடப்பட்ட தீர்மானம் அல்லது எடுக்கப்பட்ட மிகுதி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை. | பெற்றுக்கொள்வதற்கு இணக்கப்பாட்டின அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | |
| (iv) | பொலன்னறுவை மாவட்டத்தில் பல்நோக்கு கட்டிடம் மற்றும் மும்மொழிக் கல்வியுடனான புதிய தேசிய பாடசாலை ஒன்றை நிர்மாணித்தல். | | |
| | பொலன்னறுவை மாவட்டத்தில் பல்வகையான மற்றும் மும்மொழி கல்வியுடன் புதிய தேசிய பாடசாலைகளை நிர்மாணிப்பதற்காக 2017 ஒக்டோபர் 25 ஆம் திகதி ரூபா 297,843,626 பெறுமதியான ஒப்பந்தத்தில் தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 59,568,725 ஆரம்ப முற்பணம் மற்றும் ரூபா 8,935,309 ஆன பெறுமதிசேர் வரி அந்த ஆண்டின் போது கல்வி அமைச்சு செலவிட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளின் தாமதம் காரணமாக 2020.01.22 ஆம் திகதி அந்த உடன்படிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அத் திகதியில் அறவிடுவதற்கு காணப்பட்ட ஆரம்ப முற்பணத் தொகை ரூபா 40,850,633 மற்றும் பெறுமதிசேர் வரி ரூபா 6,127,600 ஆக காணப்பட்டது. அவ்வாறே மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் தாமதமடைந்ததற்கு உரிய கோரிக்கைகளின் ஆலோசனைக் கட்டணம் ரூபா 6,367,091 ஆகும். மீளாய்வாண்டில் முடிவடைந்த இந்த செயல் முன்னேற்றம் 42 சதவீதமாக இருந்ததுடன் செயற்திட்டத்தை முடிவுறுத்தும் வரை தாமத காலத்திற்கு ஆலோசனை சேவைக் கட்டணம் செலுத்துவதற்கு அமைச்சிற்கு ஏற்பட்டுள்ளது.<br><br>முதலாவது ஒப்பந்தகாரருக்கு ரூபா | இந்த நிர்மாணங்களுக்குரிய பெறுகை நடவடிக்கைகள் இந்திய தூதுவர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் , முதலாவது ஒப்பந்தகாரரின் நலிவான செயல் முன்னேற்றத்தினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் இந்த ஒப்பந்தம் மத்திய பொறியியல் சேவைகள் தனியார் கம்பனிக்கு (CESL) கையளித்து தற்போது நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்திய தூதுவர் அலுவலகத்தினால் ஒப்பந்தகாரருக்கு அமைச்சினால் VAT வரித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்துடன் உடன்படிக்கை இந்திய தூதுவர் அலுவலகத்தினால் செய்யப்பட்டமையால் செலுத்தப்பட்ட VAT வரித் | செயற்திட்ட நடவடிக்கைகளை தாமதம் இன்றி உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 111,043,064 செலுத்தப்பட்டிருந்ததுடன் அவர் விலகியதன் பின்னர் ரூபா 186,800,562 ஆன மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி ரூபா 200,664,128 தொகையில் புதிய ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தக் கிரயம் ரூபா 13,863,566 இனால் உயர்வடைந்து சென்றிருந்ததுடன் அந்த ஒப்பந்தத்தொகை 191 நாட்கள் கால எல்லையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. | தொகையை மீள அறவிடுவதற்காக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விரிவுரை கட்டண முரண்கள் காணப்பட்டமையால் கோரிக்கை கடிதம் 2022.12.23 ஆம் திகதி பெறுகை குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. பெறுகை குழுவின் தீர்மானம் தற்போது வரையில் கிடைக்காமையினால் மேலதிக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (v) | ஆசிய அபிவிருத்தி வங்கி (SESIP) கடன் தொகையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட இரண்டாம் நிலை கல்வி பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | |
| * | மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 800,000,000 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 386,072,201 ஆகும். அதன் பிரகாரம் சேமிப்பான மொத்த நிதி ஏற்பாடு ரூபா 413,927,799 ஆக இருந்தமையும் அது மொத்த நிதி ஏற்பாட்டின் சதவீதமாக 52 சதவீதமும் அவதானிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட பிரதான 02 இலக்குகளில் அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், கடன் தொகையை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை குறித்துரைத்த கால அட்டவணையில் அடைந்து கொள்ள வேண்டியதாகக் காணப்பட்டது. | 2022 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் போதியளவான செயல் முன்னேற்ற அறிக்கையிடப்படாமைக்கு 2022 ஆம் ஆண்டில் இரண்டாவது காலாண்டின் இறுதி காலத்தில் முன்னர் நாட்டில் காணப்பட்ட நிதி நெருக்கடி 2022 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் சில பிரிவுகளுக்காக கட்டுநிதி விடுவிக்கப்பட்ட போதும், ஆண்டின் இறுதியில் கணக்குகளை தீர்த்து வைக்க வேண்டியிருந்தமையால் திட்டமிடப்பட்ட செயலமர்வுகளை திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை. தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) மற்றும் பரீட்சை திணைக்களத்தின் சில செயற்பாட்டு பகுதிகள் 2023 ஆம் ஆண்டில் பிற்போடபட்டமையும் இந்த சேமிப்புக்களுக்கு காரணமாகும். | இலக்கிடப்பட்ட ஒதுக்கீடுகளை சரியான குறிகாட்டிகளுடன் குறித்துரைத்த கால அட்டவணையில் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| * | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் தொகை மற்றும் உலக வங்கி கடன் தொகையின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்ப கல்வி கிளையின் பிரதான பணிகள் 08 இன் கீழ் உப செயற்பாடுகள் 46 இற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 705,000,000 ஆக இருந்ததுடன், செயற்பாடுகளுக்குரிய செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 8,260,764 ஆகும். அதன் பிரகாரம் அடையப்படாத நிதி சார் செயல் முன்னேற்றத்தின் காரணமாக மொத்த பெறுமதியில் ரூபா 696,939,236 அதாவது 98 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த போதிலும், சகல செயலமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் இணையவழி ஊடாக மேற்கொள்ளல், எரிபொருள் நெருக்கடி மற்றும் அநேகமான பெறுகை நடவடிக்கைகளின் விடயப் பரப்புக்கள் மறுசீரமைத்தல் மற்றும் தொடர்பானதாக இருந்தமையால் அந்த நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் மெதுவாக காணப்பட்டதன் காரணமாக பெறுகை தேவைகளை அமுல்படுத்துவதற்கு இடையூறாக இருந்தது. அவ்வாறே நிதி அமைச்சின் இலக்கம் 03/2022 என்ற சுற்றறிக்கையும் இதற்காக தாக்கமளித்திருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் குறிகாட்டிகளை அடைந்து கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை குறித்துரைத்த கால அட்டவணையில் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| * | ஆசிரியர் கல்வி நிர்வாக கிளையின் கீழ் இரண்டாம் நிலை கல்வி சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய தெரிவு பரிசோதனையின் போது 03 ஒதுக்கீட்டு இணைப்புகளுக்காக ரூபா 380,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்த செயற்பாடுகளில் எந்தவொரு செயல்முன்னேற்றமும் அடையப்படாதிருந்ததுடன், இன்னும் திட்டமிடல் கட்டத்தில் மாத்திரம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இனை உள்ளடக்கிய இந்த பணிப் பொறுப்புகள் கைவிடப்பட்டிருந்தது. எனினும் 2022 ஒக்டோபர் மாதம் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் இதற்காக ரூபா 380 மில்லியன் அளவிலான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், திட்டமிடப்பட்ட தொழில்நுட்ப உபகரண பட்டியலின் கூறுவிலைகள் அதிகரித்து சென்றமை மற்றும் பொருள் இறக்குமதி வரையறுக்கப்பட்டமையினால் மீண்டும் மீண்டும் திருத்துவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை குறித்துரைத்த கால அட்டவணையில் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெறுகை நடவடிக்கைககள் 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | |
| * இரண்டாம் நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக அல்லது கட்டியெழுப்புவதற்காக தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் இலக்கிடப்பட்ட 13 விடயங்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக ரூபா 295,000,000 தொகை 04 கட்டங்களின் போது 750 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கல்வி அமைச்சின் இலக்கம் 07/2022 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த நிதி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 270,000,000 தொகை அதாவது 91 சதவீதம் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் போது வழங்கப்பட்டமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | பொதுத் திறைசேரியில் இருந்து கட்டு நிதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக பாடசாலைகளுக்கு கட்டுநிதி வழங்குதல் தாமதமாக இருந்ததுடன் மானியத்தில் செலவிட வேண்டிய காலம் 2022.12.31 ஆந் திகதி வரை நீடித்து சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் கடந்த காலத்தில் பாடசாலைகள் நடாத்துதல் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பான நிலைமை மற்றும் திறைசேரியில் இருந்து நிதி வழங்குதலில் ஏற்பட்ட தாமதம் ஏற்பட்டமையினால் மானிய செலவினங்கள் செய்யவேண்டிய காலத்தை மீண்டும் நீடிப்பதற்கு உரிய சுற்றறிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்கை குறித்துரைத்த கால அட்டவணையில் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் தெரிவு பதிவு செய்யப்பட்டிருந்த 212 மோட்டார் வாகனங்கள் கல்வி அமைச்சிற்கு சொந்தமாக காணப்படவில்லை. | உரிய அமைச்சு மற்றும் நிறுவனங்களின் மூலம் தகவல்கள் கோரி மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட புத்தகங்களில் பதிவழித்தல் கூற்றின் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்படுகின்ற ரூபா 5,065,289 பெறுமதிக்குரிய 10 நட்டங்களை அறவிடுவதலோ அல்லது புத்தகங்களில் பதிவழித்தலோ மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நட்ட இழப்புக்கள் தொடர்பாக தாமதம் இன்றி உரிய பிரகாரம் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | விலைமதிப்பீட்டு திணைக்களத்தால் ரூபா 3.1 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த றுஹுணு தேசிய கல்வி கல்லூரியின் உத்தியோகபூர்வ விடுதி 2018 செப்தெம்பர் 07 ஆந் திகதி திடீர் தீ விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் இந்த கட்டிடத்தின் பெறுமதி மற்றும் மீப்பே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ நிலையத்தின் கேட்போர் கூடம் என்பன 2019 பெப்ரவரி 09 ஆந் திகதி ஏற்பட்ட தீயினால் ஏற்பட்ட ரூபா 72 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான இழப்பிற்கு உரியதாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது 2022.11.20 ஆந் திகதி நியமிக்கப்பட்ட புதிய பரிசோதனை சபையினால் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2013/2014 ஆம் ஆண்டுகளின் போது பத்தலகெதர உபகரண களஞ்சியத்தில் ரூபா 12,905,806 ஆக அறிக்கையிடப்பட்டிருந்த மோசடிகள், 2015 ஆம் ஆண்டில் நீர்.கொ/ நியூஸ்டட் மகளிர் வித்தியாலயத்தில் ஏற்பட்டிருந்தாக அறிக்கையிடப்பட்ட பற்றுச்சீட்டு புத்தகங்களில் ஏற்பட்ட ரூபா 4,510,409 ஆன மோசடிகள் மற்றும் நீர்கொழும்பு ஹரிச்சந்திரா தேசிய பாடசாலையில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு கிடைத்த பணத்தை வங்கியில் இடும் போது ஏற்பட்டிருந்த மோசடிகளிலிருந்து மேலும் அறவிட வேண்டிய ரூபா 1,384,225 தொகைகளுக்குரிய கூட்டு மொத்தமாக ரூபா 18,800,440 தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது. | மே 16 ஆந் திகதி ஆரம்ப விசாரணை அறிக்கை விநியோகிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனை அறிக்கை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பரிசோதனை சபையினால் சபையிடம் விசாரணை செய்த போது அறிவிக்கப்பட்டிருந்தது. நீர்கொழும்பு ஹரிச்சந்திரா தேசிய பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு கிடைத்த பணத்தை வங்கியில் இடும் போது ஏற்பட்டிருந்த மோசடிகள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபரிடம் இருந்து உரிய நட்டத்தை அறவிடுவதற்கான | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகளை எடுக்குமாறு பாடசாலையின் அதிபர் அறிவித்திருந்ததுடன் மேலும் இது தொடர்பாக அமைச்சின் மூலம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (iv) | நில்வளா தேசிய கல்வி கல்லூரியின் விரிவுரை மண்டபத்தை திருத்தும் போது 2017 ஆம் ஆண்டின் போது கல்வி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமரா முறைமை கல்லூரியின் ஒப்பந்தகாரால் முறையற்ற வகையில் அகற்றப்பட்டமையால் 2019 ஒக்டோபர் மாதம் முதல் செயலிழந்த நிலைமைக்கு உட்பட்டிருந்ததுடன் மீண்டும் தயாரித்து அமைப்பதற்காக ரூபா 1,012,205 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பாதுகாப்பு கெமரா முறைமையை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு தேவையான நடடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய இலக்கம் அமப/16/0167/716/008 என்ற அமைச்சரவை குறிப்பில் தேசிய விஞ்ஞான நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் ஹோமஹமயில் பிட்டிபனயில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியின் ஒரு பகுதியை கையேற்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 280 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதன் உரித்து அமைச்சிற்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி காணியின் உரித்தை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு தொடர்பான இணக்க கூற்றின் பிரகாரம் அமைச்சில் இருந்து அமைச்சு மற்றும் திணைக்களம், மாகாண சபைகளுக்கு இடமாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டு மொத்தமாக ரூபா 162,053,327 அறவிட வேண்டியிருந்ததுடன் அதில் 05 மிகுதியை மிஞ்சிய மீதி ரூபா 69,419,033 ஆகும். ஏனைய அமைச்சு, திணைக்களங்கள், மற்றும் மாகாண சபைகளுக்கு தீர்த்து வைக்கப்பட வேண்டிய மீதி ரூபா 39,994,516 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 24,586,484 ஆகும் அந்த மீதிகளை அறவிடுவதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது . | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2022 ஏப்ரல் 05 ஆந் திகதிய ED/1/27/15/01/2022 என்ற தேசிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் இடமாற்றங்களை அமுல்படுத்தும் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாடசாலையில் 10 வருடங்களை பூர்த்திசெய்த ஆசிரியர்கள் வருடாந்தம் கட்டாய இடமாற்றத்தின் கீழ் உட்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வு செய்யப்பட்ட 11 தேசிய பாடசாலைகளில் 244 ஆசிரியர்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாம் ஆசிரியர்கள் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iv) | காலி மஹிந்த வித்தியாலயத்தின் அதிபரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் கல்வி அமைச்சின் கொள்கை மற்றும் திட்டமிடல் பணிப்பாளரின் 2016 ஏப்ரல் 11 ஆந் திகதிய இலக்கம் ஈடீ/3/37/3/9/i-ii என்ற உள்ளக குழு அறிக்கையில் 2016 ஆம் ஆண்டின் போது முதலாம் தரத்திற்கு மேலும் சமனான வகுப்பொன்றை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 தரம் முதல் 11 ஆம் தரம் வரை சமாந்தர வகுப்புக்களை அதிகரிக்காமையினால் புலமைப்பரிசில் சித்தியடைந்த 45 மாணவர்களை பாடசாலைகளுக்கு சேர்ப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 05 ஆம் தரத்தில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நியாயமான வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த வகையில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதி இலக்கம் 05/2008 மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 05/2008(i) என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனம் ஒன்றில் இருந்து சேவை பெறுகின்ற பொது மக்களின் தேவைகளை விரைவாகவும், செயற்திறனாகவும், தரமானதாகவும் மற்றும் தொடர்ச்சியாகவும் நிறைவேற்றுவதற்கான எழுத்து மூல கடப்பாடொன்றின் வகையில் சகல அரசாங்க நிறுவனங்களும் பிரஜைகள் - சேவை நலனாளிகள் விஞ்ஞாபனத்தை ஸ்தாபிக்க வேண்டியிருந்த போதிலும் கல்வி அமைச்சின் மூலம் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் விஞ்ஞாபனம் தயாரித்து பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | கல்வி அமைச்சின் பிரஜைகள் சேவை நலனாளிகள் விஞ்ஞாபனம் தற்போது தயாரிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் - சேவை நலனாளிகள் விஞ்ஞாபனத்தை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) விசேட கல்வி பிரிவில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 5:1 விகிதத்தின் பிரகாரம் இருக்க வேண்டிய போதிலும் 09 மாகாணங்களில் 55 பாடசாலைகளில் 66 ஆசிரியர்களின் மிகையும் 212 பாடசாலைகளில் 349 வெற்றிடங்களும் காணப்பட்டன. மேலும் விசேட கல்வி தொடர்பான பயிற்சியுடன் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதும் ஏனைய பாடங்களில் கற்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 147 ஆசிரியர்கள் 135 பாடசாலைகளில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த ஆசிரியர்கள் தொடர்பாக 2020 திசெம்பர் 13 ஆந் திகதிய இலக்கம் 37/2020 என்ற கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் ஆலோசனை பத்திரத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகை ஆசிரியர்களின் வெற்றிடம் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி ஆசிரியர்களை சமப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஆசிரியர்களை சமப்படுத்துகின்ற வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2020 நவம்பர் 19 ஆந் திகதிய DMS/SM/12 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழக தொலைக்கல்வி அமைச்சிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 45 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |